## காட்டூரில் கலைஞர் கோட்டம்

# கலைஞர் திரைப்பட நகரில் கலைக் கோட்டம்!



அஞ்சுகத்தாய் பெற்றெடுத்த
அஞ்செழுத்து மன்னவரே!
அண்ணாவின் அற்புதவிளக்காய்
வாழ்ந்த கலையுலக காவலரே!
பிஞ்சு வயதிலேயே பிரசங்கியாரின்
பிழைதனைஅவையிலேசுட்டிக்காட்டிய
திருக்குவளை தந்த ஞானசூரியரே!
"வீரம் விலை போகாது விவேகம்
துணைக்கு வராவிட்டால்" என எழுதி
திரைப்பட வசனங்களை. தெரு எங்கும்
சாமானியனையும் பேசவைத்த
பெரும் பேனாக்காரரே!
கலையுலகத் தம்பிகளையும்
கண்ணெனக் காத்துவந்த கலைஞரே!
திரையுலகத் தொழிலாளிகள்
வாழ்ந்திட அறுபத்தைந்து ஏக்கர்கள்
தந்து புதிய திரைப்பட நகரம் மலர்ந்திட
விதை தூவிய அதிசயப் படைப்பாளியே!
உங்கள் நூறாவது ஆண்டில்
கலைஞர் திரைப்பட நகரில் எமது
கலைக்கோட்டம்... இதுவே எங்கள்
காணிக்கை! திராவிட அரசியல் நாயகன்
இதனை திறந்து வைக்கும்நாள் 3.6.2024



வி.சி.குகநாதன்
திரைப்பட
இயக்குநர்

## அமைச்சர்கள் ஐ.பெரியசாமி - மா.சுப்பிரமணியன் - அனிதா ராதாகிருஷ்ணன் - கே.எஸ்.மஸ்தான் வாழ்த்து!

# 172-வது வட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆசிக் அலி இல்ல மணவிழா!

சென்னை, ஜுன் 21 -

சென்னைதெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 172 -வது வட்டக் கழக துணைச் செயலாளர் எஸ். ஆசிக் அலி - ஏ.ஜன்னத் ஆகியோரது மகள் ஏ.பாத்திமா (எ) பவ்மீனா-எம்.யாசர் அராபத் ஆகியோரது நிக்கா (எ) திருமண விழா இன்று (21.6.2023 புதன்கிழமை) காலை 11 மணிக்கு சின்னமலை புனித தோமையர் சமூக நலக் கூடத்தில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான இரா.துரைராஜ் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஐ.கென்னடி, இ.முருகேசன், எஸ்.பாட்சா, க.உமாபதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் ஜி.யோவான், வே. முருகன், ஜி.செல்வராஜ், வே. ரமேஷ்குமார், கே.வி.ஜோய், உ.திருவேங்கடம், எல்.பரமன், ஹேமலதா, த.அன்பரச, எம். பி.சகாதேவன், பொன். அனுமந்தன், என்.கே.வெங்கடேசன், எஸ்.அசோக், எம்.டி.நீலகண்டன், ஜவகர் புகாரி, டி. வழிவிட்டான், எம்.மருகன், என்.சேகர், எம்.அப்துல் ரகுமான், வி.அபி (எ) ரபீக், கபாலி மறைக்காயர், வி.ஆறுமுகம், உ.கசேன், எம்.பாத்திமா, நைனாம்ா, பாஸ்கர், சாகுல்அமீது, உ.உசேன், ஆர். சுப்பிரமணி, எத்திராஜ், ஆர். ராஜன்பாபு, கஷ்மா முகைதீன், க.செண்பக பாண்டியன், செல்வகுகுமார், கௌரிசங்கர், அஜிஸ், சுல்தான் பாட்சா, க. கவுஸ்சரீப், வேலாயுதம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன், மீன் வளத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., எம். எல்.ஏ.க்கள் ப.தாயகம்கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம். வி.பிரபாகர்ராஜா, காரம்பாக்கம் கணபதி, அசன்மௌலானா, துணை மேயர் மு. மகேஷ்குமார், எஸ்.குணசேகரன் உள்ளிட்ட, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள் வாழ்த்துகின்றனர். எஸ்.பீர்நாகூர், எஸ்.அஸ்கர் அலி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.


தாம்பரத்தின் ஜோதி

தமிழ்நாடு சட்டப்பேரவை முன்னாள் தலைவர்

**முனுஆதி** அவர்களின்

**18ம் ஆண்டு நினைவு நாள்**

நாள்: 21-06-2023



தாம்பரத்தில் திராவிடத்தை விதைத்தவரே !
பாலாற்றுக் குடிநீரை தாம்பரத்திற்கு தந்து
தாகத்தை தணித்தவரே !
பல கல்விச்சாலைகளை உருவாக்கி
ஏழைகளுக்கு கல்விக் கண் கொடுத்தவரே !
பேரறிஞர் **அண்ணா**, தோழர் **ஜீவா**,
விடுதலை வீரர் பரலி **சு.நெல்லையப்பர்**
நினைவை போற்றும் சிலைகள் அமைத்து
மக்கள் மனங்களில் நிலைத்தவரே !
என் ஆருயிர் தந்தையே, என்றும் உங்கள் நினைவில்...
தளபதி வழியில்

**ஆதிமாறன்**

தலைமை செயற்குழு உறுப்பினர், காஞ்சி வடக்கு மாவட்ட திமுக


# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திறக்கப்பட்ட கலைஞர் கோட்டம்!

## மக்கள் கூட்டம் -இசைக் கச்சேரி- கவியரங்கம்- பட்டிமன்றம் என திணறிய திருவாரூர்

திருவாரூர், ஜுன்21

திருவாரூரில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப்போற்றும் வகையில் காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டத்தின் திறப்புவிழா தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையில் நடைபெற்றது. இந்த சீர்மிகு விழாவில் பீகார் துணைமுதல்வர் தேஜஸ்வி யாதவ் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

கலைஞர் கோட்டம் திறப்பு விழாவிற்கென இரண்டுநாள் பயணமாக திருவாரூர் வந்திருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரணடாம் நாளான (20.06.2023) நாள்முழுதும் கலைஞர் கோட்டத்தில் இருந்து மண்ணின் மைந்தரின் புகழுக்கு மேலும் பெருமைசேர்த்தார்.காலை மங்கள இசையுடன் கலைஞர் கோட்ட திறப்புவிழா முன் நிகழ்வை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி மக்களோடு மக்களாக அமர்ந்து நிகழ்வுகளை கண்டு ரசித்தார்.

அடுத்ததாக கவிஞர் வைரமுத்து அவர்களின் தலைமையில் பிரமாண்ட கவியரங்கம் கவிஞர்கள் பா.விஜய், கபிலன், ஆண்டாள் ப்ரியதர்ஷ்ணி, இனியன் ஆகியோர் பங்கேற்று கலைஞர் அவர்களின் புகழை பாடினர். அடுத்ததாக நடந்தேறிய பட்டிமன்றத்தில் சாலமன் பாப்பையா அவர்களின் பட்டிமன்றமும்,பாடகர் சின்னப்பொண்ணு, மாலதி பங்கேற்ற இசைக்கச்சேரியும் நடைபெற்றது.

மாலையில் பல்லாயிரக்கணக்கானோர் கூடியிருந்த காட்டூரில் நடைபெற்ற கலைஞர் கோட்ட திறப்பு விழாவில், செண்டை மேளம் இசைவெள்ளம் விண்ணைப்பிளக்க பீகார் மாநில துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் ஊர்வலமாக அழைத்து வரப்பட, முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் கலைஞர் அவர்களின் புதல்வி திருமதி செல்வி செல்வம் ஆகியோரின் திருக்கரங்களால் கலைஞர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது. அடுத்து கலைஞர் கோட்டத்தில் அமைக்கப்பட்ட நூலகம் மற்றும் அருங்காட்சியகத்தை பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் திறந்துவைத்து சிறப்பித்தார்.

கலைஞர் கோட்டத்தில் நடைபெற்ற புதிய திருமண மண்டப திருப்புவிழாவில் மண்டபத்தில் முதன் முதலாவதாக நான்கு ஜோடிகளுக்கு இலவசதிருமணத்தை தேஜஸ்வி யாதவ் முதல்வர் முக.ஸ்டாலின் ஆகியோர் நடத்திவைத்து மணமக்களை வாழ்த்தினர். இந்த புது மணதம்பதிகளுக்கு சீர்வரிசை மற்றும் தாலி உள்ளிட்டவைகள் கலைஞர் கோட்டம் சார்பில் வழங்கப்பட்டது.


இறுதியாக நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினர் தேஜஸ்வி யாதவ் சிறப்புரையாற்ற, முதல்வர் முக. ஸ்டாலின் அவர்கள் விழா பேருரை ஆற்றினார்.அப்போது கலைஞர் கோட்டம் அமைக்க உறுதுணையாக இருந்த திருமதி செல்வி செல்வம், மருத்துவர் மோகன் காமேஸ்வரன் ,சம்பத்குமார், அமைச்சர் எ.வ. வேலு, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன், மற்றும் கட்டிட பொறியாளர்கள் , அருகாட்சியாக பொறுப்பாளர்கள் ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசுகளை முதல்வர் அவர்கள் வழங்கி பாராட்டினார்.

இந்த நிகழ்வுகளில் ஆசிரியர் முரசொலி செல்வம், கலைஞர் அவர்களின் மகன் மு.க.தமிழரசு, கலைஞர் அவர்களது மகள் செல்வி செல்வம், திருமதி துர்கா ஸ்டாலின், திரைப்பட நடிகர் அருள்நிதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் , ம.தி.மு.க. வைச்சேர்ந்த கணேசமூர்த்தி எம்.பி., கழக பொது செயலாளர் அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி சிவா எம்.பி., ஜெகத்ரட்சகன் எம்.பி., தயாநிதி மாறன் எம்.பி., அ.ராசா எம்.பி.,கவிஞர் கனிமொழி எம்.பி., அமைச்சர் பெருமக்கள் உதயநிதி ஸ்டாலின் , அன்பில் மகேஷ் பொய்யாமொழி டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்ட தமிழ்நாட்டு அரசின் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்,

தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி எ.கே.எஸ்.விஜயன், தாட்கோ தலைவர் உ. மதிவாணன், பாண்டி.கே. கலைவாணன் உள்ளிட்ட மாவட்ட செயலாளர்கள், பூச்சி முருகன் உள்ளிட்ட தலைமைக்கழக நிர்வாகிகள், கவிச்சுடர் கவிதைப்பித்தன் உள்ளிட்ட மாநில சார்பு அணிகளின் நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், தலையமங்கலம் ஜி. பாலு உள்ளிட்ட மாவட்ட ஊராட்சி தலைவர்கள், சோம.செந்தமிழ் செல்வன், புலிவலம் எ.தேவா உள்ளிட்ட ஒன்றிய பெருந்தலைவர்கள், கவிதா பாண்டியன், புவனப்ரியா செந்தில் உள்ளிட்ட நகர்மன்ற தலைவர்கள், முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் என பல்லாயிரக்கனக்கனோர் பங்கேற்றனர்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கலைஞர் கோட்டம் திறப்புவிழாவில் இசை கச்சேரிகள், கவியரங்க கவிதைகள், பட்டிமன்ற வாதங்கள் என இலக்கிய வெள்ளத்திலும் அமைச்சர்கள் ,பாராளுமன்ற , சட்டமன்ற உறுப்பினர்கள் என நிர்வாகிகள் கூட்டத்தாலும், மாநிலம் முழுவதிலும் பங்கேற்ற மக்கள் வெள்ளத்திலும், வந்திருந்த அனைவருக்கும் பரிமாறப்பட்ட அறுசுவை உணவுகளாலும் திருவாரூர் திணறித்தான் போனது என்றால் அது மிகையில்லை.


# முதல்வர் கண்ட கலைஞர் கோட்டம்! தமிழ்க் கோட்டம்!!



அறமிலா மூடநம்பிக்கை கள்தமை
அதட்டி விரட்டிய தந்தை பெரியார்
மறமானம் தமிழர் பெறவே மக்கள்
மனமாற்றிய கருத்துரைத்த அறிஞர் அண்ணா
திறமிவர் செயல் இணைந்த மேதை ஆற்றல்
திரண்டோர் வடிவான செவ்விய சான்றோர்
துறவிபோல் வாழ்ந்துதமிழ் தமிழர் காக்கும்
தோன்றநல்நம்கலைஞர்தாம்எனல்மிகையோ

மாய்ந்த தமிழர்தம் பெருமைகள் தம்மை
மறுமலர்ச்சி கண்டிடக்கண்ட கழகம்
ஆய்ந்தநற் றமிழர்தம் மேம்பாடு வெல்லும்
ஆக்கம்செய் ஊக்கங்கள் தேக்கிய போதில்
பாய்ந்த அப்புதுவெள்ள அணைக்கட்டை வஞ்சப்
படைகொண்டு துளையிட்ட நேரம்தாம் அதனை
தோய்தடை தடுத்துக் கழகத்தை காத்திட்ட மாசிலா
தொல்படைத் தலைவர் யார்யார்? நிலைக்கும் கலைஞரே!

தந்தைநம் பெரியார் தம்வழி மாற்றார்
'தகைஅண்ணா தகுதிசெய் நெறிமுறை பிறழார்
செந்தமிழ்க்கோர் இயக்கம் தி.மு.கழகம்
செவ்வழி ஈருயிர் ஒருயிரான அன்னார்
வந்தவழியும் மறவாத ஆருயிர்க் கலைஞர்
வாகைசூடும் வரலாற்று நாயகர் தலைவர்
விந்தைசெய் நூற்றாண்டில் தந்தைக்குத் தவமகன்
வியன்கலைஞர் கோட்டமே கண்ட தென் வியப்பே!



தலைமுறை தலைமுறை தலைமுறை யாய்தமிழ்நம்
தமிழர் காக்கும் தடம்பதித்து தி.மு.க. காத்த
நிலைபெற வைத்த நெஞ்சகக் கோயிலைத் திருவாரூர்
**நிகரிலா கலைஞர் கோட்டம்** நிலைக்கப் பதித்தவர்
மலைமிகு மலைக்கா முதன்மை முதல்வர்நம்
**மன்னுபுகழ் முத்துவேல் கருணாநிதி இஸ்டாலின்**
கலைக்குரிசில் கலைஞரின் திருமகன் கண்டகலைஞர்
**கன்னித்தமிழ்க் கோட்டம்** காலம் வெல்லும் ஞாலம்சொல்லும்!

பெருங்கவிக்கோ **வா.மு.சேதுராமன்**



தென்மேற்கு பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் அண்ணாநகர் மண்டலம், வார்டு95 வில்லிவாக்கம் அகத்தியர் நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (20.06.2023) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், மண்டலக் குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் .சுதா தீன தயாளன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எல். பலராமன்**

**ஜுன் 21 (2020)**



தனது இளம் வயதிலேயே
கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு
கழகப் பணியாற்றியவர்

வடசென்னை மாவட்டத்தில்
வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர்
என படிப்படியாக உயர்ந்து மாவட்டச்
செயலாளராக பொறுப்பு வகித்து கழகம்
ஆட்சியில் இருந்தபோதும் –
எதிர்க்கட்சியாக இருந்தபோதும்,
வடசென்னையில் கழகம் வளர
பாடுபட்டவர். வடசென்னையில்
முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர்
ஆகியோர்களை கொண்டு பல
பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன்
சிறப்பாக நடத்திக் காட்டியவர்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினராக
பணியாற்றியதுடன், மத்திய கூட்டுறவு
வங்கித் தலைவராக பணியாற்றியவர்.

"இவர் பலராமன் அல்ல; 'பலே ராமன்'
என்று முத்தமிழறிஞர் கலைஞர்
அவர்களால் பாராட்டப்பட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் –
ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து
நடத்திக் காட்டியதோடு, அதில் கலந்து
கொண்டு சிறை சென்றவர்.

"கழகப் பணிகள் அனைத்தையும்
அமைதியாக, அவர் என்ன மாதிரிப்
பணியாற்றுகிறார் என்றே தெரியாத
அளவுக்கு அடக்கமாக ஆற்றுவதோடு,
அவை அனைத்தையும் நடத்தி முடிப்பார்."
என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்
அவர்கள் தனது இரங்கல் செய்தியில்
குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**